பாரிய கொழும்பு நகர்ப்புற போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலைகள் செயற்திட்டம்) II ஆம் கட்டத்தினது 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது. 2001 பெப்ரவரி 20 ஆந் திகதிய ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (ஜேஐசீஏ) மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) என்பவற்றிக்கும் இடையேயான உடன்படிக்கையின் கீழ் கொழும்பிற்கான வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை மீதான விரிவான வடிவமைப்பு கல்விக்கெனப் பெறப்பட்ட ரூபா 417 மில்லியனுக்குச் சமமான முகவராண்மை ஜப்பானிய யென் 580 மில்லியன் மானியத்துடன் இச் செயற்திட்டம் தொடக்கி வைக்கப்பட்டது. மேலும் செயற்திட்டத்தின் I ஆம் கட்டத்தின் கீழ் கொட்டாவையிலிருந்து கடுவலைக்கு 12 கிலோ மீற்றர் நெடுஞ்சாலையை அமைப்பதற்கு 2007 மார்ச் 28 ஆந் திகதியன்று எஸ்எல் - பீ89 இலக்க முதலாவது கடன் உடன்படிக்கை தற்போது ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் என அழைக்கப்படும் முன்னைய சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே ஏற்படுத்தப்பட்டது. இரண்டாவது எஸ்எல்-பீ-91 இலக்க கடன் உடன்படிக்கை 2008 ஜுலை 29 அன்றும் மூன்றாவது எஸ்எல்பீ 101 இலக்க கடன் உடன்படிக்கை 2011 மார்ச் 22 அன்றும் கடுவெலைக்கும் கடவத்தைக்கும் இடையேயான 8 கிலோமீற்றர் நெடுஞ்சாலையை அமைப்பதற்கு செயற்திட்டத்தின் II ஆம் கட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டது.

## 1.2 செயற்திட்ட அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு, காலம் என்பன

பாரிய கொழும்பு நகர்ப்புறப் போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலைகளச் செயற்திட்டம்) கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் நிறைவேற்று முகவர்களாக உள்ளதுடன் செயற்திட்டத்தை அமுலாக்கும் முகவர் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகும். கொழும்பு நகரில் பிராந்திய போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுடன் தொடர்பை அதிகரிப்பதற்கும் ஏதுவாக கொழும்பு நகரிலிருந்து ஆரம்பிக்கும் தெற்கு அதிவேகப்பாதையும் ஏனைய தேசிய வீதிகளையும் இணைக்கும் அதிவேகப் பாதை ஒன்றை கொழும்பின் சுற்று வட்டாரத்தில் அமைப்பதே செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் II ஆம் கட்ட மொத்தக் கிரயமாக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 49,000 மில்லியனுக்குச் சமமான 44,097 ஜப்பானிய யென் ஆகும். இதில் ரூபா 29,319 மில்லியனுக்குச் சமமான 37,406 மில்லியன் ஜப்பானிய யென் ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடாகியது. II ஆம் கட்டத்தின் கீழ் நெடுஞ்சாலையானது 2008 மே மாதத்தில் ஆரம்பமாகி 48 மாதங்களுக்குள் 2012 ஏப்ரலில் நிறைவடையவிருந்தது. எவ்வாறாயினும், II ஆம் கட்டத்தின் கீழ் நெடுஞ்சாலையை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் 2009 ஒக்டோபர் 22 அன்று ஒப்பந்தகாரர் ஒருவருக்கு வழங்கப்பட்டு 2015 ஜுலை மாதத்தில் நிறைவடைந்திருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிசார் கூற்றுக்களில் காணப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட உயரளவு நிதிசார் அறிக்கைகள் மற்றும் செயன் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக

ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப மீளளிப்பிற்கான விண்ணப்பங்களை ஆதரிக்குமாறு நியாயபூர்வமாக நம்பிக்கை அளிக்கக்கூடியனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதி அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப மீளளிப்பிற்கான

விண்ணப்பங்களை ஆதரிக்குமாறு நியாயபூர்வமாக நம்பிக்கை அளிக்கக்கூடியனவாக இருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,
நான் அபிப்பிராயப்படுகிறேன்.

**2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**2.2.1 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் பேணப்படும் உள்ளக நடைமுறைக் கணக்கில் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 40,016,302 மீதியானது கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தொகையாகக் காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், வீதி அபிவிருத்தி அதிகார சபையால் பேணி வரும் உள்ளக நடைமுறைக் கணக்கிலுள்ள அத்தினத்தில் உள்ளவாறான நேரொத்த மீதியாக ரூபா 48,620,225 ஐ காட்டியிருந்தது.

(ஆ) செயற்திட்டம் பேணிவரும் உள்ளக நடைமுறைக் கணக்கின் மீதியாக காட்டப்பட்ட ரூபா 646,654,827 செயற்திட்டத்திற்கெனப் பேணப்படும் வெளிச் சுற்று வட்ட நெடுஞ்சாலைச் செயற்திட்டம் - I ஆம் கட்டக உள்ளக நடைமுறைக் கணக்கில் உள்ள ரூபா 676,085,438 நேரொத்த மீதியுடன் இணங்கவில்லை.

**3. நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல்**

---

**3.1 நிதிப் பயன்பாடு**

---

நிதியளிப்பு, மீளாய்வாண்டின் பாதீட்டு ஏற்பாடு மற்றும் பயன்படுத்தப்பட்ட மற்றும் 2014 திசெம்பர் 31 வரை உள்ளவாறான நிதி என்பவற்றினது சில குறிப்பிடத்தக்க புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | பயன்படுத்தப்பட்ட நிதி | | | |
| தோற்றுவாய் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பிற்கு உடன்பாடாகிய தொகை | | மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | 2014 அம் ஆண்டின் போது | | 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஜப்பானிய யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பானிய யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பானிய யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | | | | | | | |
| கடன் இல 91 | 5,718 | 5,757 | - | - | | | |
| கடன் இல 101 | 31,688 | 23,562 | 13,872.0 | 95.34 | 12,394.11 | 259.07 | 33,679.69 |
| இலங்கை அரசாங்கம் | 6,691 | 19,681 | 89.2 | 0.64 | 82.61 | 9.56 | 1243.36 |
| | 44,097 | 49,000 | 13,961.2 | 95.98 | 12,476.72 | 268.63 | 34,923.05 |

### 3.2 பௌதிக முன்னேற்றம்

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்திட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், அத் தினத்தில் உள்ளவாறு 86 சதவீத முன்னேற்றமே உள்ளவாறு ஏற்பட்டிருந்தது. இதற்கெதிரான மீளாய்வு செய்யப்பட்ட இலக்கு 98 சதவீதம் ஆகும். உள்ளவாறான முன்னேற்றம் இலக்கைவிடப் பின்தங்கியிருந்தமையை இது சுட்டிக் காட்டியது. களனிப்பாலம் மீதான பால நிர்மாண வேலைத் தாமதத்திற்கு, கருங்கல் வேலைகளில் எதிர்பாராத மாற்றம், பைல்கெப்ஸ் (File caps) மீள் வடிவமைக்கப்பட்டமை மற்றும் தற்காலிகப் பாலங்களுக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் என்பன காரணங்களாகும்.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு கணக்காய்வுக் குழுவுடன் மேற்கொண்ட பரீட்சைகளின் பிரகாரம், கடவத்தை ஏ – 1 உள்ளக மாற்றத்தின் இடது பக்கத்தில் 0+069 கிலோ மீட்டர் ராம்ப 4 இல் ரிப்ரொக்றைச் தெர்மோ பிளாஸ்ற் (Retelctorized Thermoplast) மூலம் செய்யப்பட்ட வீதி அடையாளங்களும் வெளி ஒழுங்கையின் வலது புறத்தே 12+435 கிலோ மீட்டர் தூரத்திற்கு அவ்வாறு செய்யப்பட்ட மாற்றமும் அதிகுறைந்த தேவைகளுக்கு இணங்குமாறு செய்யப்படவில்லை.

(ஆ) வீதி நிர்மாண வேலைக்குப் பொறியியலாளர் தயாரித்த ரூபா 31.33 பில்லியன் மதிப்பீட்டை விட ஒப்பந்தகாரர் சமர்ப்பித்த கூறு விலைப் பெறுமதி ரூபா 62.04 பில்லியன் அதிகரித்ததாக இருந்தது. இதன் காரணமாக, 2010 ஒக்தோபர் 6 ஆந் திகதியன்று அக்கூறுவிலையாளருக்கு ஒப்பந்தத்தை வழங்குவதில்லை என அமைச்சரவை தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும், தீர்மானத்திற்கு முரணாக, மேற்குறித்த கூறு விலை மீளக் கருத்திற் கொள்ளப்பட்டு அதே கூறுவிலையாளருக்கு 2011 நவம்பர் 25 ஆந்

திகதியன்று அது வழங்கப்பட்டிருந்தது. அதன்போது, கூறு விலை ரூபா 44.88 பில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 2011 நவம்பர் 25 அன்று பொறியியலாளரின் மதிப்பீட்டு வீதமோ அல்லது இரண்டாவது கூறு விலைப் பெறுமதியோ தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவால் அங்கீகரிக்கப்படாத போதும், அமைச்சரவையானது தனது கூட்டத்தின்போது இரண்டாவது கூறு விலைக்கு அங்கீகாரத்தை வழங்கியிருந்தது.

(இ) பொறியியலாளரின் மதிப்பீட்டின்படி, ஆரம்பச் செலவினத்தின் கீழ் 15 மோட்டார் வாகனங்களையும் 8 மோட்டார் சைக்கிள்களையும் கொள்வனவு செய்வதற்கு ரூபா 120.73 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பின்னர் ஒதுக்கீடு ரூபா 153.54 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டு 21 மோட்டார் வாகனங்களையும் 12 மோட்டார் சைக்கிள்களையும் கொளவனவு செய்வதற்கு மேலதிகக் கிரயமாக ஏனைய வகைப்படுத்தலின் கீழ் இடைக்கால நிதியேற்பாடாக வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) வாகனக் கொள்வனவிற்கு ஒப்பந்தகாரர் செலவழித்த ரூபா 19.88 மில்லியன் பெறுமதிசேர் வரியைச் செயற்திட்டம் மீளளிப்புச் செய்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், பெறுமதி சேர்வரிக் கொடுப்பனவு தாமதமாகியதால் ஒப்பந்தக்காரர் கோரிய ரூபா 6.90 மில்லியன் வட்டியையும் செயற்திட்டமே வழங்கியிருந்தது.

### 3.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2013 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 8.6 பிரிவுகளுக்கு முரணாக, லீவு பெறாதமைக்குப் பணம் வழங்குதல், மருத்துவக் காப்புறுதி, மிகையூதியம், ஏனைய படிகள் என்பவற்றை உள்ளடக்கியவாறு செயற்திட்டத்தில் பணி புரிந்த வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களுக்கு ரூபா 6.84 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்ட நோக்கங்களுடன் நேரடியாகத் தொடர்பற்ற நடவடிக்கைகளுக்குச் செயற்திட்டத்தால் ரூபா 21.2 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. மேலும், அவ்வாறான கொடுப்பனவுகள் குறித்த அங்கீகாரம் பெறப்படாது நிர்மாண வேலை மாற்றங்களுக்கான கொடுப்பனவாகக் கருதப்பட்டிருந்தன.

(இ) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி, செயற்திட்டத்தால் ஐந்து உசாத்துணையாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். மேலும், அவர்களுக்கு மீளாய்வாண்டின்போது ரூபா 3.22 மில்லியன் ஊதியமாகவும் ரூபா 1.97 மில்லியன் வாகன வாடகைக் கட்டணமாகவும் வழங்கப்பட்டிருந்த போதும், அவர்களுக்கான வேலை விதிமுறைகள் அறிவிக்கப்படவில்லை.

(ஈ) ஒப்பந்தக்காரர்களால் வழங்கிய 3 வாடகை மோட்டர்ர் வாகனங்களும் 5 மோட்டார் வாகனங்களும் செயற்திட்ட வாகனக் குழாத்தில் இருந்தன. முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் 2007 டிசெம்பர் 20 ஆந் திகதிய 33(1) ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம் வாகன

வசதிகளுக்கு உரித்தான உத்தியோகத்தர்களுக்கு 06 மோட்டார் வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

### 3.5 காணிச் சுவீகரிப்பும் மீள் குடியமர்வு நடவடிக்கைகளும்

கிடைக்குமாறு செய்யப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கையால் இடம் பெயர்ந்த நபர்களை மீள் குடியேற்றம் செய்வதற்கு 1,3286 ஹெக்டயர் காணியைச் சுவீகரிப்பதற்கும் இழப்பீடாக 2014 திசெம்பர் 31 வரை செயற்திட்டம் செலவழித்திருந்த தொகை ரூபா 1,745 மில்லியன் ஆகும். மேலும், 2014 திசெம்பர் இறுதியளவில் செயற்திட்ட காணிச் சுவீகரிப்பும் மீள் குடியேற்ற நடவடிக்கைகளும் முடிவடைந்திருந்தன. நெடுஞ்சாலைகளின் II ஆம் கட்டத்தின் கீழ் 94 சதவீத காணிச் சுவீகரிப்பு நிறைவடைந்திருந்தபோதும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள் குடியேற்ற நடவடிக்கைகளில் 80 சதவீதம் மாத்திரமே முடிவடைந்திருந்தன.

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.2.4 மற்றும் 2.2.7 பந்திகளின் பிரகாரம், தேசிய புதினப் பத்திரிகைகள் வாயிலாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு பதவியணிக்கு ஆட்சேர்க்கப்படுவதுடன் மூன்று ஆண்டு காலத்திற்கு மேற்படாது ஒப்பந்த அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படவும் வேண்டும். எவ்வாறாயினும், வீதி அபிவிருத்திச் சபையிலிருந்து விடுவிக்கப்பட்டோர் உள்ளடங்கலாக செயற்திட்டப் பதவியணியினர் யாவரும் மேற்படி சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முராணக தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) முகாமைத்துவச் சேவைகள் திணைக்கள செயற்திட்டப் பதவியணிக்கென அங்கீகரித்திருந்த 35 பதவிகளில், 11 பதவிகளுக்கான வெற்றிடங்கள் மீளாய்வாண்டின்போது தொடர்ந்து வெற்றிடமாக இருந்தன.